**சிறுநிலவுடமையாளர்கள் வேளாண்மை தொழில்கள் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் - 2018**

---

சிறுநிலவுடமையாளர்கள் வேளாண்மை தொழில்கள் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 18 மாத காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்குமிடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட 2017 யூன் 26 ஆந் திகதிய 2000001843 ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் IX ஆம் உறுப்புரையின் 9.03 ஆம் பிரிவு மற்றும் 2017 நவம்பர் 21 ஆந் திகதிய 2000001984 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், சனாதிபதி செயலகம் நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்று மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. வணிக ரீதியான உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமையில் சம்பந்தப்பட்டுள்ள 57,500 சிறுநிலவுடமையாளர் குடும்பங்களின் வருமானத்தினை நிலையாக அதிகரிப்பது நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 17,172.42 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 105.04 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 8,893.58 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 54.40 மில்லியனை விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் நிதியளிப்புச் செய்வதற்கு இணங்கியிருந்தது. மிகுதி ரூபா 3,164.86 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிப்புச் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 26 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்படவேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலைமையினையும் மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்

வணிகரீதியான பங்குமைக்கான நுழைவு, கிராமிய நிதி மற்றும் நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் மற்றும் கொள்கை உரையாடல் ஆகிய 03 மூலக்கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படுகின்றன.

| | மூலக்கூறு | கணக்காய்வு விடயம் | தாக்கம் | தாமதத்திற்கான காரணங்கள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | வர்த்தக ரீதியான பங்குடமை மற்றும் கிராமிய நிதியிற்கான நுழைவு | 2017 யூலை 01 இலிருந்து 2018 திசெம்பர் 31 வரையான 18 மாதங்கள் காலப்பகுதியின் போது விவசாயிகள் தவிர சிறுநிலவுடைமையாளர்கள் உள்ளடங்களாக 45,000 பயனாளிகளுக்கு உப கடன்களினை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 13,887 பயளாளிகள் இனங்காணப்பட்டிருந்தனர். அதில் 2,119 பயனாளிகள் மாத்திரம் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த திகதியில் உள்ளவாறு 1,715 பயனாளிகளுக்கு ரூபா 320.13 மில்லியன் தொகையான உபகடன்கள் அளிக்கப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிர்ணயித்த இலக்குகளினை அடைந்து கொள்ள முடியாது போகும். | அடுத்த 02 வருடங்களுக்கு முன்னோக்கி நகர்வதற்கு 13,887 விவசாயிகளுடன் 09 பொது தனியார் உற்பத்தியாளர் பங்குடமை உடன்படிக்கைகளினை ஏற்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இலக்குகளினை அடைந்து கொள்ளக்கூடியவாறு செயற்திட்டத்தின் நடவடிக்கைகளினை பிரபல்யப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் மற்றும் கொள்கை | மேம்படுத்தல் கம்பனியினால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிறுநிலவுடைமையாளர்களான தேயிலை | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிர்ணயித்த | செயற்திட்டத்தின் பங்காளிகள், மேம்படுத்தல் கம்பனி மற்றும் மேம்படுத்தல் | மேம்படுத்தல் கம்பனி மற்றும் வங்கிகளினால் அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் மீது |

| | | | | |
|---|---|---|---|---|
| உரையாடல் | பயிர்ச்செய்கையாளர்களுக்கு உதவி புரியும் பொருட்டு எவ்வித பயிற்சிகளும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | இலக்குகளினை அடைந்து கொள்ள முடியாது போகும். | வங்கிக்கிடையே சில இடைவெளிகள் காணப்பட்டன. அதற்கமைய, Value chain Mobilizer பதவிக்கான நபரொருவர் கள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை பரீட்சிக்கும் பொருட்டு நியமிக்கப்பட்டிருந்தார். | நெருக்கமான மேற்பார்வை தேவைப்படுகின்றது. |

## 2.2 கள விஜயங்களின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

பின்வரும் அதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல. | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | காலி மாவட்டத்திலுள்ள வெளி விவசாயிகள் தேவைப்படும் பயிற்சிகள், உட்கட்டமைப்பு வசதிகள், தொழில்நுட்ப அறிவு மற்றும் சிறுநிலவுடமை, பயிர்ச்செய்கைக்கான ஏனைய உதவிகளின் பற்றாக்குறை காரணமாக, தேயிலை நாற்றுமேடைகளின் தயாரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பில் பாரம்பரிய முறைமைகளினைப் பயன்படுத்துகின்றனர். | விவசாயிகளினால் பராம்பரிய முறைமைகளினைப் பயன்படுத்துவது, செயற்திட்டத்தின் நோக்கங்களினை அடைந்துகொள்வதில் தாக்கமளிக்கும். | செயற்திட்ட பங்காளர்கள், மேம்படுத்தல் கம்பனி மற்றும் மேம்படுத்தல் வங்கிகளிடம் சில இடைவெளிகள் காணப்பட்டன. அதற்கமைய, கள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களினை பரீட்சிப்பதற்கு Value chain Mobilizer நியமிக்கப்பட்டிருக்கின்றார். | மேம்படுத்தல் கம்பனி மற்றும் வங்கிகளினால் அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் மீது நெருக்கமான மேற்பார்வை தேவைப்படுகின்றது. |
| (ஆ) | காலி மாவட்டத்திலுள்ள தேயிலை சிறுநிலவுடமையாளர்கள் அவர்களின் சிறுநிலவுடமையாளர் வேளாண்மைத் தொழில்களினை முன்னேற்றுவதற்கு வெளி விவசாயிகளின் கழகங்கள் / | தொடர்புடைய தரப்பினருடனான பற்றாக்குறையான ஒருங்கிணைப்புக்கள் | இனங்காணப்பட்ட விடயங்கள், இடைவெளிகளினைக் கண்டறிவதற்குத் தேவையான நடவடிக்கைகளினை எடுப்பதற்கு கம்பனி மற்றும் | - மேற்படி - |

| | | | | |
| --- | --- | --- | --- | --- |
| | குழுக்களிடமிருந்து வழிகாட்டப்பட்டிருக்கவில்லை. | | வங்கியுடன் ஏற்கனவே தொடர்பாடப்பட்டிருக்கின்றன. | |
| (இ) | காலி மாவட்டத்திலுள்ள மேம்படுத்தல் கம்பனி 537 சிறுநிலவுடமை வெளிவிவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்ட தேயிலை செடிகளின் மீள்நடுகை மற்றும் தேயிலை பயிர்ச் செய்கையின் நிரப்புப் பொருட்களின் கிரயத்தினை பகிர்ந்தளிப்பதற்கு பங்களிப்புச் செய்திருக்கவில்லை. | வெளிவிவசாயிகளினை அதைரியப் படுத்துவதற்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றமை. | இனங்காணப்பட்ட விடயங்கள், இடைவெளிகளினைக் கண்டறிவதற்குத் தேவையான நடவடிக்கைகளினை எடுப்பதற்கு கம்பனி மற்றும் வங்கியுடன் ஏற்கனவே தொடர்பாடப்பட்டிருக்கின்றன. | - மேற்படி - |
| (ஈ) | குருநாகல் பிரதேசத்தில் அமைந்துள்ள மேம்படுத்தல் வங்கிக் கிளை காலி மாவட்டத்திலுள்ள வெளி விவசாயிகளுக்கான மேம்படுத்தப்பட்ட நீடிப்புச்செய்யப்பட்ட சேவைகளினை வழங்குவதற்கு நியமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. வங்கிக் கணக்குகளினூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்களினை வழங்குவதற்கு வெளிவிவசாயிகளுக்கு தொடர்புடைய மேம்படுத்தல் வங்கியினால் பாஸ் புத்தகம் வழங்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | பயனாளிகளுக்கான கடன் அளிப்பு கடிதம் மற்றும் வங்கிக் கூற்றொன்றை வழங்குமாறு வங்கிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. | - மேற்படி - |
| (உ) | செயலாற்றல் அறிக்கைகளின் பிரகாரம், காலி மாவட்டத்தில் தாவர வளர்ப்பு செயற்திட்டங்களினை அமுல்படுத்துவதற்கு மீளாய்வு காலப்பகுதியின் போது ரூபா 15.30 மில்லியன் பெறுமதியுடைய உப கடன்களுக்கு 153 பயனாளிகள் விண்ணப்பித்திருந்தனர். அதில், 2018 | மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளினை குறைவாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றமை. | பயன்படுத்தப்பட வேண்டிக் காணப்படுகின்ற மூலப்பொருள்களின் கிரயம் காரணமாக, இந்த விகிதத்தில் முன்மொழியப்பட்ட பொறி கொட்டாரத்தினை நிர்மாணிக்க முடியாது காணப்படுகின்றமை. | பயனாளிகள் மற்றும் மேம்படுத்தல் கம்பனிகள் மற்றும் பங்கேற்பு வங்கிகளினால் முகங்கொடுக்கப்பட்ட சிரமங்கள் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு 66 பயனாளிகளுக்கு மேம்படுத்த வங்கிகளினால் ரூபா 6.60 மில்லியன் பெறுமதியுடைய உபகடன்கள் விடுவிக்கப்பட்டிருந்தது. | | | |
| (ஊ) | தாவர வளர்ப்பு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பயனாளிகள் நிழற் கூடாரங்களினை நிர்மாணிப்பதற்கு அளிக்கப்பட்ட மானியங்களினை ஏனைய நோக்கங்களுக்காக பயன்படுத்தியிருந்தமை களப் பரீட்சிப்புக்களில் வெளிப்படுத்தியிருந்தது. | ஒதுக்கப்பட்ட நிதிகளினை தவறாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றமை. | நிதியின் பயன்படுத்துகை மற்றும் அறவிடுகைகளினை நெருக்கமாகக் கண்காணிக்குமாறு பங்கேற்கும் வங்கி மற்றும் கம்பனி அறிவுறுத்தப்படும். | கண்காணிப்பு நோக்கங்களுக்காக பொறிமுறையொன்றை ஸ்தாபிக்குமாறு வேண்டப்படுகின்றது. |